2005 ஏப்ரல் 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டிருக்கின்றது. விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை, சில பிரிவுகள் மற்றும் மருத்துவர்கள் இல்லாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சக்ரபாணி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சக்ரபாணி.

***திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில், அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி, கட்டட வசதி, தேவையான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இல்லாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

(1) அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மகப்பேறுப் பிரிவு

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை, 10 படுக்கை வசதிகள் கொண்ட சிகிச்சைப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கம், ஆய்வகம் மற்றும் அல்ட்ரா ஸ்கேன் ஆகிய வசதிகளுடன் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில், நாள் ஒன்றுக்கு சராசரியாக 2 உள் நோயாளிகள், 253 புற நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறுப் பிரிவு என தனித் தனிப் பிரிவுகள் இயங்கவில்லை.

2. இரத்த சேமிப்பு வங்கி

இம்மருத்துவமனைக்குச் சில கிலோ மீட்டர் தொலைவில், திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, பழநி மற்றும் கொடைக்கானல் ஆகிய அரசு வட்ட மருத்துவமனைகளில் இரத்த வங்கி செயல்பட்டு வருவதால், இரத்த சேமிப்பு வங்கி தனியாக இம்மருத்துவமனைக்கு ஏற்படுத்த தற்பொழுது அவசியம் எழவில்லை.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2005 ஏப்ரல் 8

3. கட்டட வசதி

மேலும், இம்மருத்துவமனைக்குப் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 2.75 இலட்சம் செலவில் நுண்கதிர் அறை கட்டும் பணி துவங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலம், இம்மருத்துவமனைக்கு, 30 படுக்கைகள் வசதி கொண்ட சிகிச்சைப் பிரிவு, கட்டடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செய்ய, தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

4. மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள்

ஒட்டன்சத்திரம் வட்ட மருத்துவமனைக்கென ஒப்பளிக்கப்பட்ட 2 உதவி மருத்துவர்களும் 4 செவிலியர்களும் பணிபுரிந்து வருவதால், காலியிடம் ஏதுமின்றி இம்மருத்துவமனை நன்கு செயல்பட்டு வருகிறது.

தற்போதுள்ள அரசின் நிதி நெருக்கடி நிலையில், தனியாக அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேறுப் பிரிவு ஏற்படுத்துதல், கூடுதல் பணியாளர்கள், கட்டடங்கள் கட்டுவது போன்றவற்றை நடைமுறைப்படுத்த சாத்தியமில்லை.

திரு. ஆர். சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திலே, வருங்காலத்தில், ஒட்டன்சத்திரம் மருத்துவமனை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒட்டன்சத்திரம் நகரம், வளர்ந்து வரக்கூடிய நகரம். தேசிய நெடுஞ்சாலை எண் 209 கோவை–திண்டுக்கல் சாலையிலும், அதேபோல, மெட்டூர், பலக்கனூத்து, ஒட்டன்சத்திரம், தாராபுரம், காங்கேயம், ஈரோடு செல்கின்ற மாநில நெடுஞ்சாலை எண் 37–லும் ஒட்டன்சத்திரம் அமைந்திருப்பதாலும், தமிழ்நாட்டிலே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் ஒட்டன்சத்திரத்திலே அமைந்திருப்பதாலும், தினசரி ஆயிரக்கணக்கான வாகனங்கள், அந்த ஊருக்கு வந்து செல்கின்றன. அதேபோல், தைப் பூசம், பங்குனி உத்திரம் போன்ற சமயங்களிலே, பழநிக்குச் செல்கின்ற பக்தர்கள், இலட்சக்கணக்கிலே அந்த வழியாகச் செல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள தல புராணங்களையெல்லாம் சொல்ல வேண்டாம்.

2005 ஏப்ரல் 8]

திரு. ஆர். சக்ரபாணி: விபத்து ஏற்பட்டால், அந்த விபத்தில் சிக்கியவர்களை, கோயம்புத்தூர் அல்லது மதுரைக்குக் கொண்டு செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முன்னுரிமை அடிப்படையிலே, இந்த ஆண்டே 30 படுக்கைகளைக் கொண்ட கட்டடங்களைக் கட்டித் தருவதற்கும், அவசர சிகிச்சைப் பிரிவையும், மகப்பேறு மருத்துவப் பிரிவையும் ஏற்படுத்தித் தருவதற்கும் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதியிலுள்ள மருத்துவமனையைக் குறித்து, இங்கே பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். உறுப்பினர் கேட்கின்ற அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே, தற்சமயம் மருத்துவர்களும், செவிலியர்களும் பணிபுரிகின்றார்கள். அதேபோன்று, கடந்த ஆண்டு அந்த மருத்துவமனைக்கு குறிப்பாக, ஓர் எக்ஸ்-ரே மெஷின் வழங்கப்பட்டிருக்கிறது. வருகின்ற நிதியாண்டிலே, ஏற்கெனவே உறுப்பினர் அவர்களுக்குக் கூறியதுபோல, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றலாம்; இந்த ஆண்டு முடியாது. உலக வங்கியிடம், கிட்டத்தட்ட 597.15 கோடி ரூபாய் நிதியை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். உறுப்பினர் தெரிவித்த அந்த மருத்துவமனைக்கு மட்டும் கிட்டத்தட்ட 1 கோடியே 12 இலட்சம் ரூபாய்க்கு ஒரு வரைவு மதிப்பு தீட்டப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். வருகின்ற ஆண்டு உறுப்பினருடைய மாவட்டத்தைத் தேர்ந்தெடுக்கும்போது, அந்த மருத்துவமனையினுடைய தரம் உயர்த்தப்படும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சக்ரபாணி.

திரு. ஆர். சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 மாவட்டங்களை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திண்டுக்கல் மாவட்டம், இப்போது, மருத்துவத் துறையிலே மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால், இந்த ஆண்டு முன்னுரிமை கொடுப்பாரா என்பதை அறிய விரும்புவதுடன், அங்கே அறுவை சிகிச்சை வசதி இருக்கிறது; ஆனால், அங்கே மயக்க மருத்துவர்கள் இல்லாததால், அறுவை சிகிச்சை செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. பல் மருத்துவர்கள் இருந்தும், அங்கே அதற்கு வேண்டிய உபகரணங்கள் இல்லாமல், பல் சிகிச்சை மருத்துவர்கள் அங்கே அதற்கான சிகிச்சை

TRUTH ALONE TRIUMPHS

[திரு. ஆர். சக்ரபாணி] [2005 ஏப்ரல் 8

செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. ஆண்டுதோறும் அந்த மருத்துவமனைக்கு உணவுக்காக 45 ஆயிரம் ரூபாய் அரசு வழங்குகிறது. ஆனால், அங்கே சமையல் செய்யக்கூடிய சமையலரும், சமையல் கூடமும் இல்லாததால், ஆண்டுக்கு வருகிற 45 ஆயிரம் ரூபாயும் அரசுக்கே திரும்பச் செல்கிறது. இந்த வசதிகளையெல்லாம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவமனைக்கு ஏற்படுத்தித் தருவார்களா என்பதை நான் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டிலே, உறுப்பினருடைய மாவட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அந்த நிதியாண்டிலே, உறுப்பினர் தெரிவித்த அத்தனைக் குறைபாடுகளும் நீக்கப்பட்டு, அவருடைய கோரிக்கைகள் அத்தனையும், அந்த நிதியின் மூலமாக — நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது — அவை அத்தனையையும் நிறைவேற்றித் தர, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) பூங்கா நகர் தொகுதி, போகிபாளையம் மற்றும் குமாரசாமி ராஜாபுரம் குடியிருப்புகள் அனுபவிப்பாளர்களுக்கு கிரயம்செய்து கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூங்கா நகர் தொகுதி, போகிபாளையம் மற்றும் குமாரசாமிராஜாபுரத்தில் வாழ்ந்துவரும் மக்களுக்கு விலைப் பட்டா வழங்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.